

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 177

வெள்ளிக்கிழமை
22 மே 2026

வைகாசி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# பிரபாகரனின் சடலத்துக்கு நடந்தது என்ன?

## மௌனம் கலைத்த பொன்சேகா

**கொழும்பு, மே 22**

**பிரபாகரனின் சடலத்துக்கு என்ன நடந்தது என்பது எனக்கு தெரியும். ஆனால் அதுதொடர்பில் பகிரங்கமாகக் கூறமுடியாது. அவ்வாறு கூறினால் சிலர் அந்த இடத்துக்கு சென்று நினைவேந்தல் நடத்தக்கூடும் - இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

»11



## திருக்கேதீஸ்வரப் பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

மன்னார், மே 22

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா நேற்றுக் கொடியேற்றத்

»11

## பிரிகேடியர் பால்ராஜுக்கு ரவிகரன் எம்.பி. அஞ்சலி

கொழும்பு, மே 22

விடுதலைப்புலிகள் அமைப்பின் மூத்ததளபதியும் சமர்க்கள நாயகனுமான பால்ராஜுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றத்தில் நேற்று அஞ்சலி செலுத்தினார்.

»11

*1.475 கிராம்*

## ஹெரோய்ன் வைத்திருந்த பெண்ணுக்குக் கடூழியம்!

### யாழ். மேல்நீதிமன்றம் அதிரடி

யாழ்ப்பாணம், மே 22

ஹெரோய்ன் வைத்திருந்த பெண்ணுக்கு ஏழு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனையும், ஒரு லட்சம் ரூபா தண்டமும் விதித்து யாழ்ப்

»11

*யாழ். மாவட்டத்தில்*

## ஐந்து பிரதேசங்களுக்கு பதிவாளர்கள் நியமனம்!

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்ஐந்துபிரதேசங்களுக்கு பதிவாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ். மாவட்டச் செயலகத்தில் வைத்து யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனால் நேற்று வழங்கப்பட்டது. ஊர்காவற்

»11

*திஸ்ஸ விகாரைக்காக*

## அபகரிக்கப்பட்ட வீதி; ஜூன் 25 கட்டளை!

யாழ்ப்பாணம், மே 22

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பவானி வீதி தொடர்பில் எதிர்வரும் ஜூன் மாதம் 25ஆம் திகதியே கட்டளை

»11

## மரக்குற்றி கடத்தல் சந்தேகநபர் கைது!

கிளிநொச்சி, மே 22

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் இருந்து மரக்குற்றிகளை கடத்த முற்பட்ட நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். தருமபுரம் பொலிஸாருக்

»11

*இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம்*

## புதிய பீடாதிபதியாக கலாநிதி சிவசிந்துஜா



யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் புதிய பீடாதிபதியாக கலாநிதி சிவசிந்துஜா ஸ்ரீகோகுலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதுவரை காலமும்

»11

*சுகாதாரச் சீர்கேடு*

## மூடப்பட்டது அம்மாச்சி!

யாழ்ப்பாணம், மே 22

பலாலி வீதி திருநெல்வேலியில் இயங்கிவந்த அம்மாச்சி உணவகம் சுகாதாரச் சீர்கேடு காரணமாக மூடப்பட்டுள்ளது. திருநெல்வேலி

»11



“மலிவாவும் தரமாவும் குடுக்கிற அம்மாச்சிக்கு என்னாச்சு?”

## வடமராட்சி பிராந்தியத்துக்கு தனியான தீயணைப்புப் பிரிவு!

### பருத்தித்துறை நகரசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 22

வடமராட்சி பிராந்தியத்துக்காக தீயணைப்புப் பிரிவொன்றை நிறுவுவதற்கு பிரதேசத்திலுள்ள ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுடன்இணைந்து நடவடிக்கை

»11

*இயக்கச்சியில் இராணுவ முகாமுக்காக*

## காணி அபகரிக்கும் முயற்சி மக்களால் தடுத்து நிறுத்தம்

கிளிநொச்சி, மே 22

இயக்கச்சியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை இராணுவத்தின் தேவைக்காக அபகரிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி மக்களின் போராட்டத்தால் தடுத்து நிறுத்தப்பட்டது. இயக்கச்சி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையில் உள்ள காணியை, இராணுவ முகாமுக்காக அபகரிப்

»11

*இரணைமடுக்குளத்தில்*

## மீன்பிடிக்கச்சென்ற முதியவர் யானை தாக்கியதில் காயம்!

விரிவு பக்கம்:- 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4438 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 24 37 50 77 |
| விசே. எழுத்து | Y |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1505 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 17 18 46 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0464 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 1 0 5 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2544 |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 11 33 56 66 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6196 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 0 9 6 1 5 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2226 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 17 40 42 47 |
| விசேட எழுத்து | L |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0312 |
| வெற்றி இலக்கினம் | தனுஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 38 51 53 |

# நாணயநிதியத்திடமிருந்து இம்மாதம் 700 மில். டொலர்

## அரசாங்கம் எதிர்பார்ப்பு

**கொழும்பு, மே 22**

**சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து எதிர்வரும் 27ஆம் திகதி 700 மில்லியன் டொலர் நிதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜெயந்த தெரிவித்துள்ளார். நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றங்களுக்கு மேலதிகமாக, வெளிநாட்டு நாணயத்தைப் பெற்றுக்கொள்வதில் இந்த மாதம் 27ஆம் திகதி சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து பெரும் எதிர்பார்ப்பு உள்ளது. அதன் பணிப்பாளர் சபை நமக்கு 700 மில்லியன் டொலரை வழங்கும் என நம்புகிறோம். ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இந்த வருடத்திற்குள் 480 மில்லியன் டொலரைப் வரை பெற்றுக்கொள்ள முடியும். உலக வங்கியிடமிருந்து 150 மில்லியன் டொலரும், அதன் அணுக்க நிறுவனம் ஒன்றிடமிருந்து 50 மில்லியன் டொலரும் கிடைக்கவுள்ளன. எனவே, இதனை மேலாண்மை செய்வதில் எந்தவொரு சிக்கலும் ஏற்படாது-என்றார். (எ-இ)

# ரூபா வீழ்ச்சியைத் தடுக்காவிடின் பணவீக்கம் மீண்டும் எகிறும்!

## பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மே 22

டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு மிகக் குறுகிய காலத்துக்குள் இந்தளவுக்குப் பெருமளவில் வீழ்ச்சியடைவது நாட்டின் பொருளாதாரத்துக்கு மீளமுடியாத கடுமையான ஆபத்தாக முடியும் என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோரல எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை எரிபொருள், மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு இறக்குமதியையே நம்பியிருப்பதால், ரூபாவின் வீழ்ச்சி இறக்குமதிப் பொருள்களின் விலைகளை நேரடியாக உயர்த்தும்.

கடந்த காலங்களில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியைப் போல, சந்தையில் பொருள்களின் தட்டுப்பாடும் விலையேற்றமும் மீண்டும் ஏற்படும்.

நாணய மதிப்பின் இந்தத் தொடர் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கியும் அரசாங்கமும் உடனடியாகத் தலையிட்டுத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தவறினால், இறக்குமதிப் பொருள்களின் விலை கிடுகிடுவென உயர்ந்து, எதிர்காலத்தில் உள்நாட்டுப் பணவீக்கம் மீண்டும் பெருமளவில் கட்டுக்கடங்காமல் உயரக்கூடும் - என்றார். (ச-இ)



# ரூபா வீழ்ச்சி தற்காலிகமே பதற்றமடைய வேண்டாம்!

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 22

அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சியானது முற்றிலும் தற்காலிகமான சவாலாகும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது மிகவும் குறுகிய காலத்திற்கு மட்டுமே நீடிக்கும் என்பதால் பொதுமக்கள் மற்றும் வணிக சமூகம் வீண் அச்சமோ அல்லது பதற்றமோ அடையத் தேவையில்லை.

உலகளாவிய சந்தை மாற்றங்கள் மற்றும் தற்காலிக இறக்குமதித் தேவைகளின் அதிகரிப்பு காரணமாகவே இந்த நாணயச்சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த காலப் பொருளாதார நெருக்கடியைப் போல இது நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தாது: தற்போதைய தற்காலிக பொருளாதாரச் சவால்களுக்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து வலுவாக முகங்கொடுக்க வேண்டும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0904 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 6 4 5 8 0 2 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3170 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 52 53 57 67 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 16 21 27 69 |
| வெற்றி வாரம் | 5331 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 1000 |
| வெற்றி இலக்கம் | 04 11 50 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| கடகம் | |
| வெற்றி இலக்கம் | 16 18 39 60 |
| சீட்டிழுப்பு வாரம் | 4882 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கம் | 36 47 61 66 |
| வெற்றி வாரம் | 2346 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 21.05.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 10 19 33 34 |
| வெற்றி வாரம் | 2996 |

# சிவனொளிபாதமலையில் 322 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, மே 22

இம்முறை சிவனொளிபாதமலை யாத்திரைக் காலம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரையான காலப்பகுதியில், அங்கு போதைப்பொருள்களைக் கொண்டு சென்ற 322 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்களிடமிருந்து 20 இலட்சத்து 65,000 ரூபா அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரால் நடத்தப்பட்ட இந்தச் சுற்றிவளைப்புகளின் போது ஹெரோய்ன், ஐஸ், கஞ்சா, ஹேஷ், போதைமாத்திரைகள் உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# மோசமான நாணயமாக ஆசியாவில் ரூபா பதிவு!

கொழும்பு, மே 22

இந்த மே மாதத்துக்குள் ஆசிய கண்டத்திலேயே மிக மோசமாகச் செயற்படும் நாணயமாக இலங்கை ரூபா பதிவாகியுள்ளது என உலகப் புகழ்பெற்ற முன்னணி வணிகச் செய்தி இணையதளமான புளூம்பேர்க் அறிக்கை வெளியிட்டுள்ளது. கடந்த சில நாள்களாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பில் தொடர் வீழ்ச்சி ஏற்பட்டு வரும் பின்னணியில், ரூபாவின் மதிப்பு வரும் நாள்களில் மேலும் குறையக் கூடும் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேசிய கலைக்கூடத்திலிருந்து 42 அரிய ஓவியங்கள் மாயம்!

**கொழும்பு, மே 22**

**தேசிய கலைக்கூடத்திலிருந்து 42 பழங்கால ஓவியங்கள் காணாமற்போயுள்ளன என்று புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் பதிலளித்த போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

பண்டங்கள் கணக்கெடுப்புச் சபை ஒன்றின் மூலம், கடந்த 2015ஆம் ஆண்டில் தேசிய கலைக்கூடத்தின் ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பின்னரே இந்த ஓவியங்கள் காணாமற்போனமை தொடர்பான தகவல்கள் பதிவாகியுள்ளன.


இதற்கமைய, இருப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த ஓவியங்களின் எண்ணிக்கை 281 ஆக இருந்த போதிலும், தற்போது கலைக்கூடத்தில் 239 ஓவியங்கள் மாத்திரமே உள்ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# டொலர் ஏற்றத்தால் உயரும் பஸ் கட்டணம்

கொழும்பு, மே 22

அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பால் பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளதாவது-

அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்து, ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருவதால் அது பேருந்துக் கட்டணத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். உதிரிப்பாகங்களின் விலை வெகுவாக அதிகரித்துள்ளன. அடுத்த மாத முற்பகுதிக்குள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் எமது அறிக்கை சமர்ப்பிக்கப்படும். ஆகக்குறைந்த கட்டணம் 40 ரூபாவுக்கும் அதிகளவில் உயர்த்தப்படக்கூடும். எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் ஆம் திகதி வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தம் இடம்பெறவுள்ளது- என்றார். (ச-இ)



## பால் தேநீர் விலையுயர்வு

கொழும்பு, மே 22

பால் தேநீரின் விலை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிப்பின் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ஹர்சன ருக் ஷான் தெரிவித்துள்ளார். (ச-இ)

## வெசாக் வாரத்துக்காக விதிமுறைகள் தளர்வு

கொழும்பு, மே 22

வெசாக் பண்டிகையை முன்னிட்டு எரிபொருள் மற்றும் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்காக அரசாங்கத்தால் விதிக்கப்பட்டிருந்த விதிமுறைகளைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, குறைந்தபட்ச எரிபொருள் மற்றும் மின்சாரச் செலவுடன், கொள்கை வழிபாட்டுக்கு முதலிடம் வழங்கி, ஆமிச வழிபாட்டின் மூலம் பக்தர்களின் மனங்களை மகிழ்விக்கும் வகையில் வெசாக் வலயத்தை அலங்கரிப்பதற்குப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறை வெசாக் வலயம் இரவு 7 மணி முதல் நள்ளிரவு 12.30 மணி வரை நடத்தப்படவுள்ளதாகவும் கொழும்பு கங்காராம விகாரையின் விகாராதிபதி கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர் தெரிவித்துள்ளார். (ச-இ)



# நாட்டில் 2500 பேருக்கு தலசீமியாப் பாதிப்பு

கொழும்பு,மே 22

நாட்டில் தற்போது சுமார் 2 ஆயிரத்து 500 பேர் தலசீமியாவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வருடாந்தம் 50 தொடக்கம் 60 சிசுக்கள் தலசீமியாவுடன் பிறக்கின்றனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றாநோய்கள் பிரிவின் பணிப்பாளர் மருவர் ஶ்ரீனி அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தலசீமியா நோய் தொடர்பில் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

குருநாகல் மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான தலசீமியா நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் குருநாகல், பதுளை, கண்டி, மட்டக்களப்பு உள்ளிட்ட பிரதான 6 மாவட்டங்களைக் கேந்திர நிலையமாகக் கொண்டு தலசீமியா நோய்ச் சிகிச்சை மற்றும் பரிசோதனை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

தலசீமியா நோயாளர் ஒருவருக்கு மாதாந்தம் இரத்தம் மாற்றுவதோடு, இரும்புக் கனிமப்படிவதைக் கட்டுப்படுத்துவதற்கும் வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியான சிகிச்சையைப் பெறுவது அவசியம். இந்தச் சிகிச்சைகளுக்காக அரசாங்கத்தால் சுமார் 6 - 8 மில்லியன் ரூபா வரை செலவிடப்படுகின்றது. ஒட்டுமொத்த சனத்தொகையில் 3 சதவீதமானோருக்கு தலசீமியா நோய் உள்ளதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது-என்றார். (ச-இ)




## மீன்குஞ்சுக்கு ஏன் நீந்தப் பழக்கோணும்?

'தண்ணீரின் குணம் கலயத்தைப் பொறுத்தது' எண்டொரு பழமொழி இருக்கு. எந்தக் கலயத்துக்க தண்ணி இருக்குதோ அதுக்கேத்தபடி அதின்ர வடிவமும் மாறும், குணமும் மாறும். தண்ணி மட்டுமில்ல எங்கட டாக்குத்தர்மார் சிலரும் அப்பிடித்தான். அவையள் அரசாங்க ஆஸ்பத்திரியில இருந்தால் சுடு தண்ணியா கொதிப்பினம். பிரைவேட் ஹொஸ்பிட்டலில அதே டாக்குத்தர் ஐஸ் தண்ணி மாதிரி அன்பா, அரவணைப்பா வருத்தக்காரரோட கதைப்பார். அதாலதான் வருத்தக்காரரில கன பேர் காசு போனாலும் பரவாயில்லை எண்டு பிரைவேட் ஆஸ்பத்திரியளில போய் டாக்குத்தரைப் பார்த்து மருந்து எடுக்கிறவை. ஆனாலும் எல்லா டாக்குத்தர்மாரும் அப்பிடியில்லை. ஒருசிலர் தான் அப்பிடி. எண்டாலும் ஒரு குடம் பாலுக்குள்ள ஒரு துளி விசம் பட்டாலும் அந்தக் குடத்துல உள்ள பால் முழுக்க விசமாகிடுமெல்லோ. அந்த நினைப்பில டாக்குத்தர்மார் எல்லாருமே சுடுதண்ணிதான் எண்டு சனங்களிட்ட ஒரு எண்ணம் ஆழமாப் பதிஞ்சு போட்டுது. அந்த எண்ணம் பிழை எண்டதை சில டாக்குத்தர்மார் தங்கட செய்கையால உணர்த்தவும் செய் யினம். அப்பிடி ஒரு டாக்குத்தர் தான் பேராசிரியர் ரகுராம்.

கிட்டடியில பட்சிக்கு ஒரு போன்கோல். தனக்கு பெரியாஸ்பத்திரியில நடந்த சிகிச்சை பற்றி சொல்லி, 'எப்பிடியாவது இதை வெளியால மற்றவைக்கும் தெரியப்படுத்துங்கோ. அப்பதான் இப்பிடி நல்ல டாக்குத்தர்மாரும் இருக்கினம் எண்டு சனங்களுக்கு நம்பிக்கை வரும்' எண்டு ஒரு பொம்பிளைப் பிள்ளை கோரிக்கை வைச்சவா. அந்தக் கோரிக்கை சரியெண்டது பட்டதால அதைப் பட்சி இண்டைக்குச் சொல்லப் போகுது. அந்தப் பிள்ளை சரியான கஷ்டப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவா. கனகாலமா அவாக்கு ஒரு வயித்துக்குத்து. இரத்தப்போக்கு இருந்திருக்கு. ஆனால் அதை அவை பெரிசா எடுக்கேலை. கடைசியில ஏலாக்கட்டத்தில போய் 'செக்' பண்ணிப் பார்த்தால், வயித்தில கனக்க கட்டியள். உடனயே அந்த ஆஸ்பத்திரிக்காரர் 'பெரியாஸ்பத்திரிக்குப் போனால் நாலைஞ்சு மாதமாகும். பிரைவேட்டாக் காட்டினால் தான் உடன ஒப்பிரேசன் செய்யலாம். ஆனால் அதுக்கு நாலைஞ்சு லட்சத்துக்கு மேல முடியும். எண்டாலும் டொக்டர் ரகுராமுக்கு கடிதம் தாறம் அவரிட்ட காட்டினால் வேளைக்குச் செய்வார்' எண்டு சொல்லி இருக்கினம்.

அந்தப் பிள்ளையின்ர குடும்பத்திட்ட பிரைவேட்டா காட்ட கையில காசு இல்லை. சரி, இனி கடவுள் விட்ட வழி எண்டு பெரியாஸ்பத்திரியில போய் டொக்டர் ரகுராமிட்ட காட்டுவம் எண்டு போயிருக்கினம். பெரிய டாக்குத்தர் எண்டபடியால எப்பிடியும் தாச்சியில பொரிபடுற சோளம் மாதிரி காச்சு மூச்செண்டு கத்திப் பேசித்தான் ட்ரீட்மெண்ட் செய்வார் எண்டு பயந்து பயந்து போயிருக்கினம். ஆனால் நடந்ததோ வேற. அந்தப் பிள்ளையின்ர வீட்டில உள்ளவை மாதிரி அன்பா, அக்கறையா வருத்தம் பற்றி கேட்டு விசாரிச்சு, அவையின்ர குடும்ப கஷ்டத்தையும் கேட்டிட்டு, 'பிரைவேட் ஹொஸ்பிட்டலுக்கெல்லாம் போகத் தேவையில்லை. இஞ்சையே எல்லா வசதியும் இருக்கு' எண்டு அவையின்ர வயித்தில பாலை வார்த்திருக்கிறார். இத்தனைக்கும் அந்தச் சமயத்தில தான் பெரியாஸ்பத்திரி மருந்துக்களஞ்சியம் நெருப்பில எரிஞ்சது. அதுக்குள்ள ஒப்பிரேசனுக்குத் தேவையான சாமன்களும் எரிஞ்சதால, கன ஒப்பிரேசன்களை கொஞ்சம் தள்ளிப்போட்டவை. எண்டாலும் ஒருகிழமைக்குள்ளயே அந்தப் பிள்ளைக்கு நல்லபடியா ஒப்பிரேசன் செய்து வீட்டையும் அனுப்பிட்டினம். 'எனக்கு டொக்டர் கதைச்ச விதத்திலேயே என்ர வருத்தம் மாறிடும் எண்டு நம்பிக்கை வந்திட்டுது. இப்பிடியும் பெரியாஸ்பத்திரி டாக்குத்தர்மார் தன்மையா கதைப்பினம் எண்டு அப்பதான் தெரியும். அவரை டொக்டர் எண்டு சொல்லுறதைவிட கடவுள் எண்டுதான் சொல்லோணும்' எண்டு அந்தப் பிள்ளை தன்னை வருத்தம் பாக்க போறவை எல்லாரிட்டையும் ஒரே டொக்டர் புராணமாம். இதில ஒரு விசயம் சொல்லத்தான் வேணும். தமிழைக் கரைச்சுக் குடிச்சாலும் சொட்டுக்கூட பெருமை இல்லாமல் எல்லாரோடையும் தேனொழுக கதைக்கிற ஒரு தமிழ்ப் பேராசிரியர் இருக்கிறார். அவரோட கதைச்சாலே மனசில இருக்கிற கஷ்டமெல்லாம் கரைஞ்சு போடும். பேராசிரியர் சிவலிங்கராஜாதான் அந்தத் தேன் தமிழுக்குச் சொந்தக்காரர். அவரின்ர மகனான டொக்டர் ரகுராமுக்கும் அடுத்தவையின்ர மனம் நோகாமல், அவையின்ர கஷ்டத்தை கரைக்கிற மாதிரி கதைக்க ஆரும் சொல்லிகுடுக்கத் தேவையில்லை. மீன்குஞ்சுக்கு ஆரும் நீந்தப் பழக்கத் தேவையில்லைத்தானே. டொக்டர் ரகுராம் மாதிரி நல்லவையும் இருக்கிறபடியால்தான் கோடையிலையும் இஞ்ச மழை கொட்டினது கண்டியளோ!

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்க நினைக்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத் துணை பக்கபலமாக இருப்பார். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கன்னி:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

**தனுசு:** மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**கும்பம்:** உற்சாகமான நாள். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கித் தருவார்.

# வட்டக்கச்சியில் வயல்விழா

கிளிநொச்சி, மே 22

'காலநிலையை வென்று விளைச்சலைப் பெருக்குவோம்' என்ற தொனிப் பொருளிலான வயல்விழா, கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையமான வட்டக்கச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

விழாவில் நெல் மற்றும் பயிர்ச்செய்கை புதிய முறைகள், வீட்டுத்தோட்டம் மற்றும் உயிர் உர உற்பத்தி, நீர்ப்பாசன மற்றும் மண் பரிசோதனை, காளான் உற்பத்தி மற்றும் பெறுமதிசேர் நடவடிக்கைகள், தேனீ வளர்ப்பு மற்றும் இயற்கை விவசாயம், விவசாய இயந்திரக்காட்சி, சிறுதானிய உணவுகள் மற்றும் ஆரோக்கிய உணவுக் கண்காட்சி, செய்கைக்கான ஏற்ற ரகங்கள், பயிர் நோய் மற்றும் பூச்சி மேலாண்மை, சேமிப்புத் தொழில்நுட்பங்கள், கூட்டெருத் தயாரிப்புகள், விவசாயிகளுக்கான அரச உதவித்திட்டங்கள், வங்கிக்கடன் மற்றும் காப்பீட்டுத் திட்டங்கள், விவசாயிகள், நிபுணர்கள் கலந்துரையாடல் நேரடிக் களப்பயிற்சிகள், பொருள்கள் மற்றும் உபகரணங்கள் கண்காட்சி மற்றும் விற்பனை ஆகியன இடம்பெற்றன. மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் வி.சோதிலட்சுமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் தட்சணா மூர்த்தி யோகேஸ்வரன், மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) எஸ்.இராஜேஸ்கண்ணா, கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் கே.பிரகாஸ், மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பரந்தன் விவசாயக் கல்லூரி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (சு-113-பி)


# மணிவிழா வாழ்த்து

திருமதி வாணி இந்திரகுமார் அவர்கள்

(SLTS, BA Special in Economies.PGDE, MED)

பிரதி அதிபர்

யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி




22.05.2026 இன்று மணிவிழா காணும்
எமது கல்லூரியின் பிரதி அதிபர் அவர்களுக்கு
இனிய மணிவிழா வாழ்த்துக்களை
தெரிவித்துகொள்வதோடு ஓய்வு காலத்தில்
நீண்ட ஆயுளோடும், தேக ஆரோக்கியத்தோடும்
இனிதே வாழ இறையாசி வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர் :

**பழைய மாணவர் ஆசிரியர் சங்கம்,**
**யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.**

(cr.47569) (N-1)

# மணி விழா வாழ்த்துகள் 60



யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பிரதி அதிபர்

திருமதி.வாணி இந்திரகுமார்

SLTS1

BA(Hons) Economics,PGDE,MED,பரதகலா வித்தகர்



சேவை விபரம்

யா/வட இந்து மகளிர் கல்லூரி (நிர்வாக உதவியாளர்)
(07.09.1994 - 01.01.1995)
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி (நிர்வாக உதவியாளர்)
(02.01.1995 - 31.03.1997)
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி (ஆசிரியர்)
(01.04.1997 - 04.07.2000)
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்(ஆசிரியர்)
(05.07.2000 - 07.07.2002)
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி (ஆசிரியர்)
(08.07.2002 - 31.01.2015)
யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி (ஆசிரியர்)
(02.02.2015 - 14.10.2021)
யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி (பிரதி அதிபர்)
(15.10.2021 - 21.05.2026)

வாணியெனும் நாமங்கொண்டு
வணிக வகைப் பாடமதை
தோணிபோல நகர்த்தியே
தேனிலுமினிமையாய் போதிக்கும் வாணியே வாழிய நீவிர் பல்லாண்டு.....!
தன்மையான பண்பு பூண்டு
பன்மையாக நமையழைத்து
நன்மையான வார்த்தை சொல்லும்
மேன்மையான வாணியே வாழிய நீவிர் பல்லாண்டு.....!!
வர்த்தகத்துறை கடந்து
நர்த்தனத்திலும் வித்தகங்கண்டு
நாட்டிய வித்தகியாய் பெயர் நிலை
நாட்டிய வாணியே வாழிய நீவிர் பல்லாண்டு ......!!!
விஞ்ஞான உலகிலும் கூட
மெஞ்ஞான வழியதனிலும் நின்று
அஞ்ஞான உணர்வதனைப் போக்கி
எம் ஞானம் வளர்ப்பித்த வாணியே வாழிய நீவிர் பல்லாண்டு...!!!!

அகவை அறுபது கடந்த ஓய்வுக்காலமது சிறப்பாயமைந்திட வாழ்த்துகிறோம்

வாழ்த்துவோர்
வட்டமேசை
யா/டிறிபேக்கல்லூரி
சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## மீண்டும் பொருளாதார நெருக்கடியா?

மேற்காசியாவில் நீடித்துவரும் பதற்றமான சூழல் காரணமாக உலகப் பொருளாதாரம் மீண்டும் ஒரு கடுமையான மந்தநிலையை நோக்கி நகர்வதாக ஐக்கிய நாடுகள் சபை விடுத்துள்ள எச்சரிக்கை, இலங்கை போன்ற வளரும் நாடுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள இறுதி எச்சரிக்கையாகவே பார்க்கப்படவேண்டும். ஐ.நா. வெளியிட்டுள்ள உலகப் பொருளாதார நிலைவரம் மற்றும் வாய்ப்புகள் பற்றிய இடைக்கால அறிக்கையின்படி, உலகளாவிய பணவீக்கம் மீண்டும் தலைதூக்கியுள்ளதுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியும் கணிசமாக வீழ்ச்சியடையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து மெல்ல மீண்டுவரும் இலங்கைக்கு, இந்த உலகளாவிய பொருளாதாரப்புயல் புதிய சவால்களையும் நெருக்கடிகளையும் தோற்றுவிக்கப் போகிறது என்பது திண்ணம்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பணவீக்கம் 4.2 வீதத்திலிருந்து 5.2 வீதமாக அதிகரிக்கும் என ஐ.நா. கணித்துள்ளது. எரிசக்தி விலைகளின் திடீர் உயர்வு உலகளவில் சாதாரண குடும்பங்களையும் வணிகங்களையும் பாதித்துள்ள சூழலில், இலங்கையும் இதன் நேரடித் தாக்கத்திற்கு உள்ளாகும். கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருள்களை முழுமையாக இறக்குமதியையே நம்பியிருக்கும் இலங்கைக்கு, உலக சந்தையில் ஏற்படும் விலையுயர்வு நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பை மீண்டும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும். உள்நாட்டில் போக்குவரத்து, மின்சாரம் மற்றும் உற்பத்திச் செலவுகள் உயர்ந்து நுகர்வோர் மீதான பணவீக்கப் பாரம் மீண்டும் அதிகரிக்க வழிவகுக்கும்.

உர விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தடங்கல்களால் விவசாய உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளதாகவும், இது பயிர் விளைச்சலைக் குறைத்து உணவுப்பொருள்களின் விலைகளை உயர்த்தும் என்றும் ஐ.நா. எச்சரித்துள்ளது. கடந்த காலங்களில் உரம் மற்றும் விவசாயக்கொள்கைகளில் ஏற்பட்ட தவறுகளால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இலங்கை விவசாயத்துறை, தற்போதுதான் ஓரளவிற்கு தலைதூக்கி வருகிறது. இத்தருணத்தில், உலகளாவிய ரீதியில் உரம் மற்றும் விவசாயப்பொருள்களின் விலை அதிகரித்தால், உள்நாட்டு விவசாய உற்பத்திச்செலவு மீண்டும் உச்சம் தொடும். இது உணவுப்பொருள்களின் விலையை உயர்த்தி, நாட்டின் உணவுப்பாதுகாப்பிற்கு பெரும் சவாலாக மாறும்.


மத்திய கிழக்கு நெருக்கடியால் மேற்கு ஆசியாவின் பொருளாதார வளர்ச்சி 3.6 வீதத்திலிருந்து 1.4 வீதமாகக் குறையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேற்கு ஆசிய நாடுகள் இலங்கையின் தேயிலை ஏற்றுமதிக்கு மிக முக்கியமான சந்தையாகும். அங்கு ஏற்படும் பொருளாதார மந்தநிலை இலங்கையின் ஏற்றுமதி வருவாயைப் பாதிக்கும். மேலும், இலங்கைக்கு அதிக அந்நியச்செலாவணியை ஈட்டித் தரும் சுற்றுலாத்துறையும் உலகளாவிய பதற்ற நிலை மற்றும் விமானக் கட்டண உயர்வு காரணமாகப் பாதிக்கப்படலாம். அத்துடன், மத்திய கிழக்கில் வாழும் இலங்கைத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்புகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டால், நாட்டிற்கு வரும் புலம்பெயர் தொழிலாளர்களின் பண அனுப்புதலும் வீழ்ச்சியடையும்.

பணவீக்க எதிர்பார்ப்புகள் காரணமாக குறுகிய கால பிணைப்பத்திரங்களின் வட்டி விகிதங்கள் அதிகரித்துள்ளதாக ஐ.நா. அறிக்கை கூறுகிறது. சர்வதேச நிதிச்சந்தைகளில் வட்டி விகிதங்கள் அதிகரிக்கும்போது, சர்வதேச கடன்களை மறுசீரமைப்பு செய்து வரும் இலங்கை போன்ற நாடுகளுக்குப் புதிய கடன்களைப் பெறுவதும், வட்டி செலுத்துவதும் அதிகச் செலவுமிக்கதாக மாறும். இது நாட்டின் நிதிஸ்திரத்தன்மையைக் கேள்விக்குறியாக்கும்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகள் மற்றும் உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் மூலம் இலங்கைப் பொருளாதாரம் தற்போதுதான் ஸ்திரத்தன்மையை நோக்கி நகர்கிறது. இச்சூழலில், வெளிப்புறக்காரணிகளால் ஏற்படும் இந்த உலகளாவிய பொருளாதார நெருக்கடி, நாம் கஷ்டப்பட்டுப் பெற்ற முன்னேற்றங்களைத் தலைகீழாக மாற்றக்கூடும். அரசாங்கம் இந்தச் சர்வதேச எச்சரிக்கையைச் சாதாரணமான ஒன்றாகக்கடந்து போகாமல், எரிசக்தி சேமிப்பு, உள்நாட்டு விவசாய ஊக்குவிப்பு மற்றும் மாற்று ஏற்றுமதிச் சந்தைகளைக் கண்டறிதல் போன்ற மூலோபாயத் திட்டங்களை உடனடியாக வகுக்கவேண்டும். வரவிருக்கும் உலகளாவிய பொருளாதார அதிர்வுகளில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கான தற்காப்பு நடவடிக்கைகளை இப்போதே திட்டமிடுவதே புத்திசாலித்தனமாகும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



### பொய்யாமொழி

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்

**பொருள்:** பிறர் பொருளையும் தம்பொருள்போல் போற்றிச் செய்தால், அதுவே வாணிகம் செய்வோர்க்கு உரிய நல்ல வாணிக முறையாகும்.



## 128 காட்டு யானைகள் 5 மாதங்களில் மரணம்

கொழும்பு, மே 22

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 128 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என்று வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மனிதர்களின் பல்வேறு செயற்பாடுகள் காரணமாகவே அதிகளவிலான யானைகள் உயிரிழந்துள்ளன. துப்பாக்கிச்சூட்டுக் காயங்களால் 20 யானைகளும், சட்டவிரோத மின்சார இணைப்புகளில் சிக்குண்டதால் 15 யானைகளும் பலியாகியுள்ளன. மேலும் கட்டுத்துவக்கு வெடிபொருள்களை உட்கொண்டதால் 10 யானைகளும், விவசாயக் கிணறுகளுக்குள் தவறி விழுந்தமையினால் ஐந்து யானைகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளன.

இவை தவிர, நஞ்சு வைக்கப்படல், புகையிரத மோதல்கள், நீரில் மூழ்குதல் மற்றும் பிற இயற்கை விபத்துகள் காரணமாகவும் ஏனைய யானைகளின் மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

இதேவேளை மனித-யானை மோதல்களின் காரணமாக, யானைகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி இதே காலப்பகுதிக்குள் 35 மனித உயிர்களும் பலியாகியுள்ளன என்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, மே 22

தமன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெத்சிரிகம வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கெத்சிரிகம நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, தனக்கு முன்னால் சென்ற ஹைஏஸ் ஒன்றை முந்திக்கொண்டு செல்ல முயன்ற போதே இந்த விபத்து சம்பவித்துள்ளது. இதன்போது கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஹைஏஸ்டன் மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும், பின்னால் பயணித்தவரும் உடனடியாக அம்பாறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பின்னால் இருந்து பயணித்த இளைஞர் உயிரிழந்துள்ளார். (எ-இ)

## முன்னாள் பொலிஸ் போதையுடன் கைது

அம்பாறை, மே 22

ஐஸ் போதைப்பொருளுடன் முன்னாள் பொலிஸ் அலுவலர் ஒருவர் கல்முனை தலைமையக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரெலிகொம் அருகில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைதானார். அவரிடருந்து 10 கிராம் 130 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கல்முனை தலைமையக பொலிஸார் மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)





## போலிப் பிணையாளர்கள் நால்வருக்கு பயணத்தடை

கொழும்பு, மே 22

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் கபில சந்திரசேனவுக்குச் சார்பாக, தலா 15 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு நீதிமன்றில் போலிப் பிணையாளர்களாக ஆஜரான இருவர் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த இருவர் உட்பட நால்வரை கொழும்பு நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் லஹிரு சில்வா நிபந்தனைகளுடன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.


சந்தேகநபர்கள் நால்வரும் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டனர்.

நால்வருக்கும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் வெளிநாட்டுப் பயணத்தடையும் விதிக்கப்பட்டது. (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசியல் யாப்புக்கு மதிப்பளித்து மாகாணத் தேர்தலை நடத்துங்கள்



### சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்து

**கொழும்பு, மே 22**
**நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலம் உள்ளதால், தேர்தலை நடத்துவதற்கான முழுச் சூழலும் ஆளுந்தரப்பிடம் உள்ளது. தற்போதைய அரசாங்கம் நினைத்தால் நடைமுறையிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்துடன் கூடிய அரசியல் யாப்புக்கு மதிப்பளித்து மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் பிரதித் தலைவரும் பேராசிரியருமான றொஹான் சமரஜீவ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-
இலங்கையில் மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நீண்டகாலமாக நடத்தப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளமையால் குடிதண்ணீர், வடிகாலமைப்பு, கழிவகற்றல் போன்ற மக்களின் அன்றாடத் தேவைகளுடன் தொடர்புடைய பல முக்கியமான திட்டங்கள் இன்று முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன. பழைய தேர்தல் முறையின் கீழ் ஒருமுறை மட்டும் இந்தத் தேர்தலை அவசரமாக நடத்துவதற்கான மாற்றுயோசனையை நாம் முன்வைத்தோம். அதற்கு அனுமதி அளிக்கும் சட்டம் குறித்து உயர்நீதிமன்றம் ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கத்தினால் இதற்கான தனிநபர் பிரேரணையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
எனவே, தேர்தலை நடத்துவதற்குத் தேவையான அனைத்து சட்டப்பின்னணிகளும், வளங்களும் உள்ள சூழலில் அரசாங்கம் இன்னும் காலதாமதம் செய்வது அர்த்தமற்றது- என்றார். (ச-இ)

# விலையேற்றங்கள் தற்காலிகமானவை

### அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மே 22
நாட்டில் பொருளாதார நெருக்கடி இனி ஒரு போதும் தோற்றம் பெறாது. பொருளாதார ஸ்திரப்படுத்தலுக் கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பூகோள நெருக்கடியால் ஏற்பட்டுள்ள விலையேற்றம் தற்காலிகமானதே என சுற்றாடல் துறை அமைச்சர் தம்மிக்க பட்டபெந்தி தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற அமர்வின்போது இலங்கை மத்திய வங்கியின் 2025ஆம் ஆண்டுக்கான பொருளாதார மீளாய்வு அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மத்திய கிழக்கில் மோதல் நிலைமை நாளுக்கு நாள் தீவிரமடைவதால் உலகளாவிய பொருள்கள் மற்றும் சேவை விநியோகம் பாதிக்கப்பட்டு அத்தியாவசிய பொருள்களின் விலைகள் உயர்வடைந்துள்ளன. 2022ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை மீண்டும் தோற்றம் பெறாது. பொருளாதார ஸ்திரப்படுத்தலுக்குரிய நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. 2026ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தான் பாதீட்டுக்கான பற்றாக்குறை குறைக்கப்பட்டுள்ளது.
அரச செலவுகள் குறைக்கப்பட்டு அவை மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)

# ஈஸ்டர் தாக்குதலை வைத்து அரசியல் நாடகம் புனைவு!

### நாமல் தெரிவிப்பு



கொழும்பு, மே 22
மட்டக்களப்புச் சிறையில் இருந்த பிள்ளையானை நான் சந்தித்தது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. அதனை உறுதிப்படுத்துவதற்காக மட்டுமே குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் பிரான்ஸ் வரை பயணித்திருக்கிறார்கள் என்றால், அது நிச்சயமாகப் பொதுப் பணத்தை வீணடிக்கும் ஒரு செயலாகும் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அவர் தனது எக்ஸ்தளப் பதிவில் இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கடந்த 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் சிறையில் இருந்த பிள்ளையானை நான் நேரில் சென்று சந்தித்தேன் என்பது உண்மைதான். அதில் எந்த இரகசியமும் இல்லை. நான் அங்கு சென்று பார்வையிட்டதற்கான சிறைச்சாலை உத்தியோகபூர்வப் பதிவுகள் தற்போதும் மிகத் தெளிவாகக் காணப்படுகின்றன. அந்த காலகட்டத்தில், பிள்ளையான் தலைமையிலான கட்சி 2015 ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் எங்களுடன் உத்தியோகபூர்வக் கூட்டணியின் பங்காளியாகவே போட்டியிட்டிருந்தது. அரசியல் ரீதியாகச் சிறையிலுள்ள ஒரு பங்காளித் தலைவரைச் சந்திப்பது சாதாரண ஒரு விடயம்.
அரசியல் ரீதியாக நான் பிள்ளையானைச் சந்தித்ததை உறுதி செய்யவா இவ்வளவு தூரம் மக்கள் பணத்தில் பிரான்ஸ் வரை பறந்தார்கள்? எனக்குத் தெரிந்தவரை, ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாகப் பிள்ளையான் தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்படவில்லை. அப்படியிருக்க, இவ்வாறான ஊடக நாடகங்கள் மூலம் அரசாங்கம் யாரைத்தான் திருப்திப்படுத்த முயற்சிக்கிறது? தற்போதைய ஆளுங்கட்சியினர் ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு விதமான கதைகளையே மேடைகளில் கூறிவருகிறார்கள்.
தற்போது இந்தத் துயரச் சம்பவத்தை அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்காகவும், இலக்குவைப்பதற்காகவும் அரசாங்கம் பயன்படுத்த முயலுமாயின், அது இன்னமும் உண்மையான பதில்களையும் நீதியையும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் இழைக்கப்படும் கடுமையான அநீதியாகும் -என்றார். (ச-இ)

# விபத்துகளைக் கட்டுப்படுத்த வங்களாவடியில் சுற்றுவட்டம்

### உறுப்பினர் அனுசியா வலியுறுத்து

போக்குவரத்துச் சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்தவும், விபத்துகளைக் கட்டுப்படுத்தவும், வங்களாவடி நகர்ப்பகுதியில் சுற்றுவட்டம் அமைப்பது அவசியம் என்று வேலணைப் பிரதேசசபையின் உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.
வேலணைப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் முன்மொழிவைச் சமர்ப்பித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
வங்களாவடி நகரின் மையத்தில் சுற்றுவட்டம் அமைப்பதால், கனரக வாகனங்களைக் கொண்டுசெல்வது கடினம் என்றும், இட அமைவு போதாதென்றும் சிலர் தடுக்க முனையலாம். இந்தச் சுற்றுவட்டம் பிரதேசத்தின் அழகையும், அடையாளத்தையும் உறுதி செய்வதுடன், வீதிச் சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்து, விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்கவும் முடியும்-என்றார்.
இந்த முன்மொழிவை வரவேற்ற சபையின் உறுப்பினர்கள், துறைசார் தரப்பினரின் ஆலோசனையைப் பெற்று இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தனர். (சு-27-20-பி)



# புதிய அரசியலமைப்புப் பணிகள் வாக்குறுதியை தட்டிக்கழிக்காதீர்!

### மனோ எம்.பி. அரசிடம் கோரிக்கை

கொழும்பு, மே 22
இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது, கடந்த கால நல்லாட்சியில் புதிய அரசியலமைப்புப் பணிகள் எங்கு நிறுத்தப்பட்டதோ, அங்கிருந்து மீண்டும் ஆரம்பிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், இதுவரை அதற்கான எந்தப் பூர்வாங்க நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
அண்மையில் ஏற்பட்ட டித்வா அனர்த்தம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கூறி, தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைத் தட்டிக்கழிக்கக் கூடாது. இனியும் காலதாமதம் செய்யாது தேர்தல் வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.
எங்களுக்கு அவசரமாக ஆட்சி அமைக்கவோ அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றவோ எந்தத் தேவையும் இல்லை. இந்த நாட்டில் உண்மையான இன நல்லிணக்கமும் தேசிய சமாதானமும் ஏற்படுவதே எமக்கு முக்கியமாகும். பாதிக்கப்பட்ட மக்களின் குரலை ஒலிப்பதற்கே நாடாளுமன்றம் இருக்கிறது. அரசாங்கத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டும் போதெல்லாம் எம்மீது 'துரோகி' முத்திரை குத்த முற்படக்கூடாது.
இந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் இன்னும் மூன்று வருடங்களே எஞ்சியுள்ளன. சாக்கு போக்குகளை கூறிக்கொண்டு காலத்தைக் கடத்தவேண்டாம். நல்ல விடயங்களைச் செய்ய அரசாங்கம் முன்வந்தால் எமது இரு கரங்களையும் உயர்த்தி ஆதரவு வழங்க நாம் தயாராகவே இருக்கின்றோம்-என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சுரக்சா காப்புறுதித் திட்டம் தொடரும்

கொழும்பு, மே 22
பாடசாலை மாணவர்களுக்கான 'சுரக்சா' காப்புறுதித் திட்டத்தின் காலக்கெடு 2027ஆம் ஆண்டுடன் நிறைவடையவிருந் தாலும், அதற்குப் பின்னரும் இந்த காப்புறுதித் திட்டம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும் என பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்துள்ளார்.
நேற்று நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)


## பதவி வெற்றிடம்

### இயந்திர இயக்குனர் (Machine Operator)

வடக்கு கூட்டுறவு வங்கி மற்றும் திருவையாறு படித்த வாலிபர் விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சியில் இணைந்து நடாத்தும் அப்பளத் தொழிற்சாலைக்கு ஒரு உற்பத்தி பணியாளர் (ஆண்) தேவைப்படுகிறது.

**தகைமைகள்**
* இயந்திரங்கள் மற்றும் ஏதாவது தொழிற்சாலைகளில் வேலை செய்த அனுபவம் மிக்கவர்கள் வரவேற்கத்தக்கது.

தகைமையுள்ளவர்கள் கீழ்வரும் இலக்கத்திற்கு தொலைபேசி மூலமோ அல்லது எமது அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்தோ தங்களது வேலையை உறுதி செய்ய முடியும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
* வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி, முதியோர் இல்ல வளாகம். கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
* 021-223-2673

மனித வள முகாமையாளர்
NCDB
(cl 47568 (N.1)


# இருண்ட யுகம் நோக்கி தள்ளப்படுகிறது நாடு!

## எதிர்க்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, மே 22
அமெரிக்க டொலரின் பெறுமதி நூல றுந்த பட்டம் போலக் கட்டுப்பாடின்றி எகிறிச் செல்கிறது. முன்னாள் ஜனாதி பதி கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் நிலவிய அதே இருண்டயுகம் தான் தற்போதைய அநுரகுமார திஸா நாயக்கவின் அரசாங்கத்திலும் தொடர் கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். நாடாளு மன்றத்தில் நடைபெற்ற, இலங்கை மத்திய வங்கியின் 2025ஆம் ஆண்டிற் கான பொருளாதார மீளாய்வு அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத் தில் அவர் இதனைத் தெரிவித்தார். டொல ரின் பெறுமதி நாளுக்கு நாள் உயர்வ டைந்து, இலங்கை ரூபாவின் மதிப்பு அதலபாதாளத்துக்குச் செல்கிறது.

ஆனால், அரசாங்கம் எதனையும் கண்டுகொள்ளாமல் மௌனமாக இருக்கிறது. கோத்தாபய ஆட்சியில் டொலர் எகிறி பொருளாதாரம் வீழ்ந்த அதே நிலைதான் இன்றும் நடக்கிறது. அரசாங்கம் ஆட்சிப் பீடமேறி ஒன்றரை வருடம் முடிந்துவிட்டது. இதுவரை இவர்களால் ஆரம்பிக்கப்பட்ட புதிய பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள் எதுவுமே இல்லை.

பொருளாதார ரீதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு எவ்வித மான நிவாரணங் களும் இதுவரை வழங்கப்படவில்லை. விவசாயி களுக் குப்போதிய உரம்கூட விநியோகிக்கப்படு வதில்லை. இவ்வாறான சூழலில் தேசியப் பொருளாதாரம் எவ்வாறு வளர்ச்சியடையும்? - என்றார். (ச-இ)


## INVITATION FOR BIDS
## MANTHAI EAST PRADESHIYA SABHA - PANDIYANKULAM

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB) but limited to the bidders who registered under Northern Province.
3. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs. and 15:00 hrs.

| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period up to | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 22.05.2026 until 04.06.2026 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 01.06.2026 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 05.06.2026 | | | | | |
| 1 | PSDG/NP/MU/MEPS/2026/LAR/02 | Construction of Selvapuram 9th Road | PSDG Fund | 14.40 | 126 | C7 or above (Building) | 3,000.00 | 20-August-2026 | 101,600.00 | 17-Sep-2026 |
| 1 | PSDG/NP/MU/MEPS/2026/LAR/01 | Construction of Pandiyankulam Market road stage III | PSDG Fund | 6.77 | 98 | C8 or above (Building) | 3,000.00 | 20-August-2026 | 216,000.00 | 17-Sep-2026 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal (T.P: 021 228 4434, e.mail: psmanthaieast@gmail.com) from 9:00 hrs. to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) must be delivered to the Chairman, Manthai East Pandiyankulam on or before 10.30 A.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal commencing at 10.30 AM as stated in table above.
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Manthai East Pradeshiya Sabha,**
**Pandiyankulam,**
**Naddankandal.** 22.05.2026




குப்பிழான் வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் புதன் கிழமை சிறப்பு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமானது. தொடர்ச்சியாக 10 தினங்கள் அலங்கார உற்சவம் இடம்பெறும். (க-66)


## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 . 09 . 1981



மறைவு
21 . 05 . 2018

**கனகசபாபதி கௌரிதரன்**


எட்டு ஆண்டுகள் கடந்தும்
நிழலாய் தொடரும் நினைவுகள்
மறையவில்லை உங்கள் முகம்
மனதில் என்றும் நிலைத்திருக்கும்
இமை மூடினாலும்
இதயத்தில் வாழும் நினைவுகளுடன்
என்றும் நாம்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.
(CS/61489) J-1

பிரிவால் துயருறும்
தாய், தந்தை
சகோதரர்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. காரராளர் நவரத்தினம்

திதி: வளர்பிறை சஷ்டி
(விமலாஸ் கடை உரிமையாளர் - சாவகச்சேரி)

தோற்றம்
13.12.1946

மறைவு
25.05.2023

அப்பா !
நீங்கள் எங்கள் முதல் ஹீரோ.
எங்கள் வாழ்வின் முதல் பாதுகாப்பு.
மூன்று வருடங்கள் கடந்துவிட்டன அப்பா...
ஆனால் உங்களை இழந்த அந்த நிமிடம்
இன்னும் அங்கேயே நின்றுகொண்டிருக்கிறது.
அன்பான மனிதர் அப்பா- நீங்கள்
யார் என்ன கேட்டாலும் "இல்லை" என்று சொல்லாமல்
எல்லோருக்கும் உதவி செய்த நல்ல உள்ளம்...
பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றியே
எங்கள் சந்தோஷத்தில் வாழ்ந்தீர்கள்
எங்களைத் தனியாக விட்டுவிட்டு
அம்மா போய் நான்கு மாதத்தில்
நீங்களும் சென்றது ஏனோ அப்பா...
கதவை திறந்தால்
நீங்கள் உட்கார்ந்திருந்த அந்த இடம்- இன்று
அமைதியாக என்னை பார்த்துக் கொண்டிருக்கிறது
தினமும் மூன்று கோவிலுக்கு சென்று
கும்பிட்டு விட்டு தான் கடையைத் திறப்பீரகளே...
லயன்ஸ் கழகத்தில் இருந்து பலருக்கு சேவை செய்தீர்கள்
அவ்வளவு நல்ல மனம் கொண்ட உங்களை
காலம் ஏன் எங்களிடமிருந்து பிரித்தது...
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கிறோம்...
என்றும் எங்கள் இதயத்தில் வாழும்
எங்கள் அன்பு அப்பாவுக்கு
கண்ணீரான நினைவஞ்சலி... ..

இல.38, காளி கோவில் வீதி,
சாவகச்சேரி

அன்பால் தவிக்கும்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 06 கண்டி வீதி. 560/4 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கந்தையா தியாகராஜா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை தியாகராஜா கைம்பெண் நவநாயகம் 12.07.1972 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஆர்.இராசா முகதாவில் 1039ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் சி.குமாரசாமி பெண் இராசலட்சுமி என்பவருக்கு வழங்கி யுள்ளார்.

குறித்த ஆதனத்தை சி.குமாரசாமி பெண் இராசலட்சுமி 27.01.1980ம் திகதி யிட்டு பிரசித்த நொத்தாரிசு ஆர்.இராசா முகதாவில் 3015 ம் இலக்க அறுதி உறுதி மூலம் தம்பிராசா மகள் இராசேஸ்வரி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று. சிவியாதெரு இறை. தற்போது பிராயந்தாழ்வு: - பர.நில.இலா. 24 1/2 இதில் தெற்கு பக்கம் அறுதி செய்யப்பட்ட பர.நில.இலா. 8 குளி 6 நீக்கி மிகுதி பர.நில.இலா. 16 குளி 3 ஆனால் 1970ம் ஆண்டு ஆவணி மாதம் 18ம் திகதி உத்தரவு பெற்ற அளவைகாரர்க்கு. இராசகாரியர் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1389 இலக்கப் படத்தின் படி துண்டு 6 பர.நில.இலா 19 குளி 9 இதில் கிழக்குப் புறமாக நடுப்பெற பர.நில.இலா ஒன்று குளி பதினாறும். செய்பயிர் வான்பயிர்களும். இக்காணிக்கும் இதன் மீதிக் காணி களுக்கும் பாதைக்காகப் பொதுவில் ஒதுக்கப்பட்டதும் பன்னிரண்டடி அகலம் கொண்டதும் பர.நில.இலா ஒன்று குளி ஐந்து விஸ்தீரணம் கொண்டதுமான பாதை நிலத்திலிதற்குரிய பங்கும் பாவிப்புரித்தும். பர. நில.இலா 1 குளி 16 க்கும் எல்லைகள்.

இதற்கெல்லைகள்
கிழக்கு - மாணிக்கராசா பெண் பத்மாதேவிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்.
வடக்கு - அப்பாத்துரை பெண் கண்மணியின் ஆதனம்.
மேற்கு - குறித்த பாதை நிலம்.
தெற்கு - தியாகராசா பொன்னுத்துரையின் ஆதனம்.

இதடாங்கலும்
தற்போது இவ்வாதனத்தை தம்பிராசா. மகள் இராசேஸ்வரி தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித் துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற் குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்த ருமாறும். உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது தம்பிராசா மகள் இராசேஸ்வரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

முதல்வர்,
யாழ் மாநகரசபை.
(cr.47562) (N-1)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு. மே 22 அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடைந் துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள் ளது.
நேற்று அதிகாரபூர் வமாக வெளியிடப் பட்டுள்ள நாணய மாற்று வீதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 354.03 ரூபாவாக பதிவாகியுள்ளது.
அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வ னவு பெறுமதி 342.63 ரூபாவாக பதிவாகியுள்ளது.
தொடர்ச்சியாக டொல ரின் மதிப்பு அதி கரித்து வருவதால், இலங்கை ரூபாய் மேலும் பலவீனம டைந்து வருகின்றது என்று மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.
(எ-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
22 . 03 . 1946

மறைவு
17 . 05 . 2026

## சுப்பிரமணியம் பரமேஸ்வரி (சுபத்திரை)

(CS/61486) J-1

மாகியப்பிட்டி. அளவெட்டி மத்தியை பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரமேஸ்வரி (சுபத்திரை) அவர்கள் கடந்த (17.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு - செல்லம்மா தம்பதியரின் மகளும். வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும். சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும். சசிரேகா (பிரான்ஸ்), விக்கினராஜ் (Universal Tilemart Lanka Tiles Storekeeper), நிறஞ்சனா ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம். விஜயலட்சுமி. மற்றும் சொர்ணலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும். ஞானபூரணி. காலஞ்சென்ற சிவபாதசுந்தரம். மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும். ஸ்ரீஜெகன் (பிரான்ஸ்). வசீகரன். உஷாஜனனி (இலங்கை போக்குவரத்துச் சபை காரைநகர் சாலை லிகிதர்) ஆகியோரின் மாமியாரும். தனுஷ். அனுஷ். ஆதிஷ் (பிரான்ஸ்). லபினாஷ். ஹர்சிதா ஆகியோரின் பேர்த்தியும். பிரதாபன். மதீபன் ஆகியோரின் பெரியம்மாவும். சுமதி. சுகுமார். காலஞ்சென்ற தர்சன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2026) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
பத்தானை, அளவெட்டி மத்தி, அளவெட்டி.
074 054 0422

# மரண அறிவித்தல்



தோற்றம்
25 . 05 . 1960

மறைவு
18 . 05 . 2026

## ஞானபாலசிங்கம் சந்திராதேவி

கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானபாலசிங்கம் சந்திராதேவி அவர்கள் கடந்த 18.05.2026 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஞானபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான நடராசா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், தாரணி (அமெரிக்கா), யாழினி (ஜேர்மன்), திவாகரன் (பிரான்ஸ்), தாட்சாயினி ஆகியோரின் அன்பு தாயும், உதயராசா, இந்திரகுமார், யாழினி, திருக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீராம், ராகவி, பிரணவி, அஜன், ஓவியா, மீரா, இனியா, அதிரன், விஸ்னுஜன், தனுராம், கோவர்த்தன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(CS 31826)A

தகவல்:
குடும்பத்தினர்.
(Sunway)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐ.பி.எல். தொடர்

# பிளே-ஓவ் சுற்றிலிருந்து வெளியேறிய சென்னை




ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத் அணியிடம் தோல்வியடைந்து பிளேஓவ் சுற்றிலிருந்து வெளியேறியது சென்னை சுப்பர் கிங்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சாய் சுதர்சன் 84 ஓட்டங்களையும், சுப்மன் கில் 64 ஓட்டங்களையும், பட்லர் 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணிக்கு முதலாவது பந்தில் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார் சாம்சன். தடுமாற்றம் நேற்றும் தொடர்ந்தது. முடிவில் அந்த அணி 140 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 89 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்தத் தோல்வியைத் தொடர்ந்து பிளேஓவ் வாய்ப்பை இழந்து வெளியேறியது சென்னை சுப்பர் கிங்ஸ். (ம)

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 02 . 1941



இறப்பு 21 . 05 . 2026

### கந்தையா பரமகுருநாதன்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமகுருநாதன் அவர்கள் நேற்று (21.05.2026) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்யைா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஐயாத்துரை - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகலிங்கம், காலஞ்சென்ற அருந்தவனாதன், சிவபாக்கியம், நாகேஸ்வரி, சிவசுப்ரமணியம், நந்தினி, புவனேஷ்வரி, அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற சிங்கராஜா, சிவபாலன் மற்றும் சிவகுமார் ஆகியோரின் சகோதரனும், மகாதேவன், பற்குணம், Dr.பாஸ்கரன் (Surgeon), வசந்தினி கிருபாகரன் மற்றும் காலஞ்சென்ற பிரபாகரன் ஆகி யோரின் அன்புத் தந்தையும், சுமதி, சாந்தகுமாரி, Dr.அருள்மொழி, தயாளன் மற்றும் கீதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சைலஜா உமாரதன், கீர்த்தனா, துவாரகன், சாருகா, திவ்யா, ரெபேக்கா, வினோத், வினித், அபிஷா, திருமகள், திகம்பரன் மற்றும் சாயீசன் ஆகியோரின் அன்புப் பேரனும், ருத்விகாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2026) வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
0777 363546

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை - சுழிபுரம்

### சபைக்குச் சொந்தமான வட்டுக்கோட்டை நவீன சந்தைக் கடையை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல்

சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடையை குத்தகைக்கு வழங்குவதற்காக குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளிற்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2026.05.22 - 2026.06.08 பி.ப 03.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2026.06.09 மு.ப 10.30 மணி வரை
கேள்விதிறக்கும் திகதி :- 2026.06.09 மு.ப 10.30 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் இடம் :- வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகம்

| தொ. இல | கடை விபரம் | மாதாந்த வாடகை | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| Vaddukoddai New Market Shop | | | | | |
| 01 | Shop 06 | 2,400.00 | 576,000.00 | 100,000.00 | 2,000.00 |


நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரி இலங்கையில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
   கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கடை வாடகை சம்பந்தமாக சபையினால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகையை குறித்த மாத இறுதிக்கு முன் செலுத்தி பற்றுச்சீட்டு பெறுவதற்கும் ,க்கால எல்லைக்குப் பிந்திச் செலுத்தப்படும் வாடகைத் தொகையின் 10% தண்டப்பணம் செலுத்துவதற்கும், தொடர்ந்து மூன்று மாதங்கள் பணம் செலுத்தத் தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர் / செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு 09.06.2026 ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக நேரடியாகவே அல்லது பதிவுத்தபால் மூலமாகவே அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம்முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கபெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
4. சித்திகர கேள்விதாரராக தாங்கள் தெரிவு செய்யப்பட்டால் 15.06.2026 ம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைந்த கட்டுப்பணம் முழுத்தொகையையும் ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இரு வாரத்திற்குள் பிரதேச சபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினைப் பெற்று வியாபாரம் அல்லது தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்பதனுடன் தகுந்த காரணங்களின்றி வியாபார நிலையம் பூட்டி வைத்தல் கூடாது.
5. சித்தி பெறும் கேள்விதாரர் உப குத்தகைக்கு வழங்குவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்படாத பொருட்களை விற்பனை செய்வதோ அல்லது மதுபான வகைகளையோ அல்லது போதைவஸ்துக்களையோ அல்லது தடை செய்யப்பட்ட வேறு எந்தப் பொருட்களையோ விற்பனை செய்வது தடை செய்யப்படுவதுடன் கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
6. சித்திபெற்ற குத்தகைக்காரர் வலிகாமம் மேற்கு பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
7. சித்திபெற்ற குத்தகைகாரர் பாதுகாப்பு வைப்பு பணமாக 03 மாத வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
8. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமைச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
9. மேலதிக விபரங்களை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்
பெறுகைக்குழு
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.
சுழிபுரம்.
22.05.2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாண மட்ட ரைகுண்டோப் பற்றிக்ஸ் மாணவன் முதலிடம்



யாழ்ப்பாணம், மே 22

வடமாகாண பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 20 வயதுக் குட்பட்டோருக்கான ரைகுண்டோப் போட்டியில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ஜே.ஆர். பியன் பெனோ முதலாம் இடத்தைப் பெற்று தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

(எ-41-20)


## மாநகரசபை, யாழ்ப்பாணம்.
## மேற்பார்வையாளர் தரம் III பதவி வெற்றிடங்களை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல் 2026

மாகாண ஆளுநரின் செயலாளரின் G/NPC/A/04/LG/App/LGM/26/01 ஆம் இலக்க 2026.04.16 ஆம் திகதிய கடிதம் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளரின் NP/14/1/ET/Uns/Gen/2025 ஆம் இலக்க 04.05.2026 ஆம் திகதிய கடிதம் மூலம் அறியத்தந்ததற்கமைவாகவும். 01.01.2013 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுப்பெறும் வகையில் வடமாகாண கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்ட வட மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான மேற்பார்வையாளர் சேவைக்கான சேவைப் பிரமாணக்குறிப்பு மற்றும் அதன் திருத்தங்களுக்கு அமைவாகவும் மாநகரசபையில் அப்பதவிகளில் காணப்படும் கீழ்க் குறிப்பிட்டளவான வெற்றிடங்களை நிரப்புவதற்கு PL1 சம்பள அளவுத்திட்டத்தில் உள்ள பதவிகளில் நிரந்தரமாக கடமையாற்றுபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிப்பெயர் | தரம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|
| 01. சுகாதார மேற்பார்வையாளர் | III | 07 |
| 02. சந்தை மேற்பார்வையாளர் | III | 03 |
| 03. வேலை / வெளிக்கள மேற்பார்வையாளர் | III | 08 |

**பொதுவான தகைமைகள்**
- விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- திறமையான ஆளுமையும் உடற்தகுதியும் நன்னடத்தையையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி யாழ் மாநகரசபை எல்லைக்குள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான நிரந்தர வதிவிடத்தை உடையவராக இருத்தல் வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் யாழ்ப்பாண மாவட்டத்தினுள் 05 ஆண்டுகள் தொடர்ச்சியான வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். இவை கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேசசெயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வாக்காளர் பிரித்தெடுப்பின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- வயது - வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சேவை நிபந்தனைகள்**
- மாநகரசபையில் தொடர்புடைய பதவியில் நிரந்தரமாக கடமையாற்றுவதுடன் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- நியமனம் பெறுபவர்கள் ஒருவருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்
- விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னரான ஆகக்குறைந்தது 5 வருடகால தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

**கல்வி. தொழில்சார் தகைமைகள்**
- விண்ணப்பதாரி மாநகரசபையில் தேர்ச்சியற்ற சேவையில் கடமையாற்றுபவராகவும் PL 1 சம்பள தொகுதியுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- க.பொ.த சாதாரண பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் ஆகக் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியுடன் தமிழ்மொழி. கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**
- பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இற்கமைவான சம்பளத்தொகுதி MN 1 -2 இற்கு ஏற்ப மேற்பார்வையாளர் பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் 4523 10x540-11x630- 10x890 -10x1190 -78360 ஆகும்.

**தெரிவு செய்யப்படும் முறை**
- அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குழுவினால் தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்பட்டு மேற்பார்வையாளர் நியமனம் வழங்கப்படும்.

**விண்ணப்பமுடிவுத் திகதி : 2026.06.04**

**விண்ணப்பிக்கும் முறை**

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தாபனப்பகுதியில் 2026.05.22 ஆம் திகதி முதல் உரிய விண்ணப்பபடிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தாபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

- ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் போதோ அல்லது நியமனத்தின் பின்னரோ தெரியவரும்போது தகவலொன்று பொய்யானதென அல்லது முன்வைக்கப்படும் தெரியவரும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் இவ்நியமனம் இரத்துச்செய்யப்படும்.
- விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளும் சமர்ப்பிக்கும் இடம் - தாபனப்பகுதி மாநகர சபை, யாழ்ப்பாணம்.

குறிப்பு - சுகாதார மேற்பார்வையாளர், சந்தை மேற்பார்வையாளர், வேலை வெளிக்கள மேற்பார்வையாளர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஒவ்வொரு பதவிகளுக்கும் **தனித்தனியாக விண்ணப்பிக்குமாறு** அறிவுறுத்தப்படுகின்றீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு ஒரே விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்குமிடத்து அவ்விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மாநகர ஆணையாளர் மாநகரசபை
யாழ்ப்பாணம். 2026.05.22

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 23.04.1953 | தோற்றம் 21.05.2026

### யோகேஸ்வரன் தினமணிதேவி

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

திருநெல்வேலி பழங்கிணற்றடி
வீரகத்தி விநாயகர் ஆலய வளிபடுவோர்.

(CR 47578) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 04 . 1953



மறைவு 21 . 05 . 2026

### யோகேஸ்வரன் தினமணிதேவி

நல்லூர் கைலாயபிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரன் தினமணிதேவி அவர்கள் நேற்று (21.05.2026) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகளும், யோகேஸ்வரனின் பாசமிகு மனைவியும், யோதிலா, யோமினா, யோன்சி, தினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சபேசன், ஜமுகன், மனோறஞ்சன், மேரிஸ்ரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பராசக்தி, காலஞ்சென்ற பாக்கியநாதன், பத்தினிதேவி, சாந்தினிதேவி, பாலேந்திரன் ஆகியோரின் சகோதரியும், இராஜேஸ்வரன், தவமலர் ஆகியோரின் மைத்துனியும், தருஷ், நிலோஷ், கஸ்மிகா, அகல்யா, கவிநயா, தனுஷியா, ரதிவர்ணன், சாருஜன், தான்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பிராமண உயரப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெரியபுலம் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 47577)A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபாகரனின்...

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது, 'போர் தொடர்பில் நீங்கள் இன்றளவிலும் மனதுக்குள் இரகசியமொன்றை மறைத்து வைத்துள்ளீர்கள். சிலவேளை உங்களது மனைவிக்குகூட அது தெரியாமல் இருக்கலாம். வேலுப்பிள்ளை பிரபாகரனின் சடலத்துக்கு என்ன நடந்தது?' என பொன்சேகாவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த பொன்சேகா கூறியதாவது:-

பிரபாகரன் போரில் கொல்லப்பட்டு விட்டார். இது ரகசியம் அல்ல. பிரபாகரன் கொல்லப்பட்டதும் கருணாவை விமானத்தில் சம்பவ இடத்துக்கு அனுப்பினோம். சூசை, பொட்டு அம்மானின் மனைவி உட்பட அனைவரது சடலங்களையும் அவர் அடையாளம் கண்டார். பொட்டு அம்மானின் மனைவியின் கழுத்தில் மூன்று சயனட்டுகள் இருந்தன. பொட்டு அம்மானுக்கு துப்பாக்கிச்சூடு பட்டதும், அவர் குண்டை வெடிக்கச் செய்து இறந்துவிட்டார். பிரபாகரனின் சடலம் அடையாளம் காணப்பட்டது. கடும் காயங்கள் இருந்தன. இது தொடர்பில் எனக்கு தெரியப்படுத்தப்பட்டது. அவர் புலிகளின் சீருடையில் இருந்தார். சீருடையை அகற்றுமாறு நான் கூறினேன்.

சரணடைந்தவர்களும் சீருடையில் இருப்பதற்கு நாம் அனுமதிக்கவில்லை. பிரபாகரனின் சடலத்துக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் நான் ஆலோசனை வழங்கினேன். அது என்னவென்பதை நான் சொல்ல மாட்டேன். ஏனெனில் அவ்வாறு சொன்னால் அந்த இடத்துக்கு சென்று சிலர் நினைவேந்தலை நடத்துவதற்கு முற்படக்கூடும்.

பிரபாகரன் உயிருடன் பிடிபடவில்லை. அவரை உயிருடன் பிடிக்கும் திட்டமும் எமக்கு இருக்கவில்லை. எனவே, பிரபாகரன் உயிருடன் பிடிபட்டு கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டார் என்று வெளியான தகவல்களில் உண்மையில்லை - என்றார். (அ-ம-இ)

## ஹெரோய்ன்...

பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் கடந்த 2020ஆம் ஆண்டு ஜூன் ஒரு கிராம் 475 மில்லிகிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றுவந்த நிலையில், வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே குறித்த பெண்ணுக்கு ஏழு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனையும், ஒரு லட்சம் ரூபா தண்டமும் விதித்து யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ்ராஜா உத்தரவிட்டார்.

தண்டப்பணத்தைச் செலுத்தத் தவறினால் மேலும் 12 மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தெல்லிப்பழையில் கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒரு கிராம் 44 மில்லிகிராம் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்ட நபருக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ்ராஜா அண்மையில் ஏழு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26-20)

## ஐந்து...

துறை, எழுதுமட்டுவாள், கோப்பாய், வட்டுக்கோட்டை மற்றும் கரவெட்டி ஆகிய பிரதேசங்களுக்கான பதிவாளர்களே தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் பதிவாளராக திருமதி ஜிந்துஜா சசிகுமாரும், எழுதுமட்டுவாள் பிரதேசத்துக்கான பதிவாளராக திருமதி காயத்திரி செந்தூரனும், கோப்பாய் பிரதேசத்துக்கான பதிவாளராக திருமதி தாட்சாயினி சந்திரலிங்கமும்,ன வட்டுக்கோட்டைப் பிரதேசத்தின் பதிவாளராக திருமதி ஜீவராஜினி ரமணனும், கரவெட்டிப் பிரதேசத்தின் மேலதிக விவாகப் பதிவாளராக (பொது) திருமதி தர்சிகா கஜதாசனும் நியமிக்கப்பட்டனர். (அ-ம-66)

## மரக்குற்றி...

குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவரை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-113)

## புதிய...

பீடாதிபதியாகக் கடமையாற்றிய திருமதி தெய்வி தபோதரனின் பதவிக்காலம் நிறைவுக்கு வந்ததையடுத்து, புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்காக இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடச்சபை நேற்று வியாழக்கிழமை கூடியது. புதிய பீடாதிபதித் தெரிவுக்காக இருவர் போட்டியிட்டனர். கலாநிதி சிவசிந்துஜா ஸ்ரீகோகுலன் 4 மேலதிக வாக்குகளால் முன்னிலை பெற்றுப் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இன்று முதல் அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்குச் செயற்படும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## வடமராட்சி...

மேற்கொள்வது என பருத்தித்துறை நகரசபையில் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி பிரதேசத்துக்கென தீயணைப்புப் பிரிவொன்றை உருவாக்க வேண்டிய அவசியம்கருதி பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போலால் முன்வைக்கைப்பட்ட முன்மொழிவு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகரசபையின் மாதாந்த அமர்வு நேற்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நகரசபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது, 'வடமராட்சியில் தற்போது அடிக்கடி தீவிபத்துகளும் தீ பரவலும் இடம்பெற்று வருகின்றன. எனவே, எமது பிரதந்தியத்துக்காக விசேட தீயணைப்புப் பிரிவொன்று உருவாக்கப்பட வேண்டும். இதற்கு பெருமளவு நிதி தேவைப்படும். எம்மிடம் உள்ள நிதியை வைத்து அத்தகைய கட்டமைப்பை உருவாக்க முடியாது. எனவே, வடமராட்சி பிரதேசத்தில் உள்ள ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுடன் கலந்துரையாடி இது தொடர்பில் காத்திரமான முயற்சியை மேற்கொள்ளலாம்' என்று தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் முன்மொழிந்தார். இதை சபையின் உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

தீயணைப்புத் துறையை உருவாக்கும்போது பருத்தித்துறை நகரசபையால் எவ்வாறான பங்களிப்பை வழங்க முடியும் என்று உறுதியான தீர்மானம் மேற்கொண்ட பின்னர், வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை மற்றும் கரவெட்டி பிரதேசசபைகளுடன் கலந்துரையாடி அவர்களது ஒத்துழைப்புடன் அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பது என்றும் திட்டமிடப்பட்டது. (அ-ம-100)

## மீன்பிடிக்கச்...

கிளிநொச்சி - இரணைமடுக்குளத்தில் தூண்டில் மீன் பிடிப்பதற்காகச் சென்ற 65 வயதுடைய முதியவர், யானை தாக்கியதில் படுகாயம் அடைந்தார். அந்தப் பகுதியால் சென்றவர்கள் படுகாயம் அடைந்த முதியவரை அவதானித்து, அவரை உடனடியாக மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். இதையடுத்து, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-ம-113)

## காணி...

பதற்கு நிலஅளவைத் திணைக்களமும், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகமும் இணைந்து நேற்று முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. இதையடுத்து பொதுமக்களும், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும், பச்சிலைப்பள்ளி பிரதேசசபையினர் பிரதிநிதிகளும் முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து காணி அளவீட்டு நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. (அ-ம-66)

## அபகரிக்கப்பட்ட...

வழங்கப்படும் என்று நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட பவானி வீதியை அண்மையில் இடம்பெற்ற அளவீட்டுப் பணியின்போது தவிசாளர் சுகிர்தன் அடையாளம் காட்டியிருந்தார். இதையடுத்து அந்த வீதியை இடைமறித்து அமைக்கப்பட்டுள்ள எல்லையை அகற்றுமாறு தவிசாளர் சுகிர்தனால் தையிட்டி திஸ்ஸ விகாராதிபதி ஜிந்தோட்ட நந்தாராம தேரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

பிரதேசசபையின் நடவடிக்கைக்கு எதிராக, தையிட்டி விகாராதிபதி பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கிய நிலையில், அது தொடர்பான வழக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது. இதன்படி, பவானி வீதி தொடர்பான கட்டளை நேற்று வழங்கப்படும் என்று நீதிமன்றம் ஏற்கனவே கூறியிருந்தது. வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்ட நிலையில், வழக்கின் கட்டளை ஜூன் மாதம் 25ஆம் திகதியே வழங்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது. (அ-ம-26)

## பிரிகேடியர்...

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்ததாவது:-


ஈழ விடுதலைப் போராட்டத்தின் சமர்க்கள நாயகன் பிரிகேடியர் பால்ராஜ் எம்மை விட்டுப் பிரிந்து 18 ஆண்டுகள் கடந்திருக்கின்றன. கந்தையா பாலசேகரம் என்ற இயற்பெயரையுடைய சமர்க்கள நாயகன் பிரிகேடியர் பால்ராஜ் முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியைச் சேர்ந்தவர். உலகப் போரியல் வல்லுநர்களே கண்டு வியந்த சமர்க்கள நாயகன் பிரிகேடியர் பால்ராஜுக்கு இந்த உயரிய சபையில் அஞ்சலி செலுத்துகின்றேன் - என்றார். (அ-ம-35)

## மூடப்பட்டது...

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையிலான குழுவினருக்குக் கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து, அவர் தலைமையிலான குழுவினரால் நேற்றுமுன்தினம் அங்கு விசேட கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட மேலதிக நடவடிக்கையின் அடிப்படையிலேயே அந்த உணவகம் மூடப்பட்டது. (அ-ம-26)

## திருக்கேதீஸ்வரப்...

துடன் ஆரம்பமானது. நேற்றுக்காலை உற்சவ மூர்த்திகளுக்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் கொடிக்கம்பத்துக்கு அருகாமையில் எழுந்தருளினார்கள். தொடர்ந்து கொடிக்கம்பத்துக்கு அபிஷேகம் இடம்பெற்றது. இதையடுத்து கொடியேற்றப் பெருவிழா சிறப்பாக இடம்பெற்றது. (அ-ம-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சீனாவில் வெள்ளம்; 22 பேர் உயிரிழப்பு

சீனாவின் மத்திய மற்றும் தெற்குப் பகுதிகளில் கொட்டித்தீர்த்த கனமழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 22 ஆக உயர்ந்துள்ளது. 20க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை என்று அந்நாட்டு அரச ஊடகம் தெரிவித்துள்ளது. கடந்த சில நாள்களாக பெய்துவரும் கனமழை காரணமாக பல்வேறு பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. பாடசாலைகள், அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மக்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்றுவருகிறன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

**உத்தியோகத்தர் தேவை**

மிருசுவிலில் இயங்கும் தளபாட விற்பனை நிலையைத்திற்கு பணம் அறவிடும் உத்தியோகத்தர் தேவை.
தொடர்புகளுக்கு:-
074 096 1027, 077 170 1669

## பெருந்திருவிழா

குரும்பசிட்டி ஸ்ரீ சித்திவிநாயகப்பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10 தினங்களும் காலை, மாலை விஷேட அபிஷேக ஆராதனைகளும், சுவாமி வீதிப்பிரதட்சணமும் நடைபெறும். எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தோற்சவம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

**விநியோகஸ்தர் தேவை**



யாழ். நகரில் இயங்கும் எமது பத்திரிகை நிலையத்திற்கு அதிகாலையில் பத்திரிகை விநியோகிப்பதற்கு
**பத்திரிகை விநியோகஸ்தர் தேவை.**
வாகன சாரதி அனுமதி பத்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் நேரில் சமூகம் தரவும்.
வெள்ளிக்கிழமை - 9.00 - 1.00
சனிக்கிழமை - 9.00 - 1.00
உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 25.05.1960 மறைவு 18.05.2026


**ஞானபாலசிங்கம் சந்திராதேவி**

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
**Northway நிறுவன உரிமையாளரும் ஊழியர்களும்.**

(CR 47576) A

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**வைத்தியகலாநிதி வேலாயுதம் சாரங்கன்**

**திதி: பூர்வபக்க ஷஷ்டி (22.05.2026)**

வையத்துள் 30.09.1985 வானகத்துள் 25.05.2023

கருமுகில் நிறைத்து கண் திறந்தது வானம்
மூடியே கிடக்கின்றன எம் மனக்கதவுகள்
உன் அறைக் கதவுகள் போலவே....
தீர்ந்து போனது காற்றில் உன் வாசம்
மீந்திருப்பது உன் நினைவுகள் மட்டுமே!

நீ வையத்துதித்து ஆண்டுகள் நால் பத்து
வானகமேகியோ ஆண்டுகள் மூன்று தான்!

மீண்டும் ஓர் வைகாசி!
ஒவ்வோர் குயில் கூவலும் ஏதோ ஓர் பேரிடியாய்
காற்றிலும் கந்தக வாசனை
கண் முன் படமாக நீ கண் மறைந்து போன காட்சி....

ஏன் என்ற கேள்விக்கு எவரிடமும் பதிலில்லை
ஆற்றுவாரும் தேற்றுவாரும் இன்றி வற்றிப் போன நம் கண்கள்,
வெறுமை படர்ந்த நம் மனங்கள்,
இட்டு நிரப்ப முடியாது தகித்திருக்கும் வெற்றிடம்.....

பேசித் தீராத ஆயிரம் கதையிருக்க
பேசியது போதுமென்று கடுகி நீ விரைந்திருந்தாய்....

தலை கோதத் துடித்த விரல்கள்
இன்னமும் துடித்தபடியே
துடிப்பை நிறுத்தா இதயம்
உன் நினைவுகளைச் சுமந்தபடி.....
கால்கள் மட்டும் நீ போன திசையறியாது நிற்க....
கண்கள் இன்னமும் வாசலையே பார்த்து நிற்க....
கடமை முடிந்ததென காலனோடு கண் மறைந்தாய்
கர்ம வினை தீராது பாவியர் நாம் உழல்கின்றோம்...

வாழ்ந்திருந்தாய் இப்புவியில்
சீர்மேவும் சிந்தனையாளனாய்!
பார் போற்றும் பண்பாளனாய் !
கரைந்து உன் ஆவியலல! எம் கனவு தான்
கடுகதியாய் விரைந்தோடும் காலத்தோடும்
உன் அழியா ஞாபகங்களுடனும் நாம்!
போய் வா! மரணம் ஓர் முடிவல்ல
உன் ஆன்மாவின் தொடக்கமது
பிறவா முக்தி பெற்று சுகித்திருப்பாய்
இறைவன் திருவடியில்....

எமது மகன் வைத்தியகலாநிதி வேலாயுதம் சாரங்கனின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (22.05.2026) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில்.

**குடும்பத்தினர்.**

(CS/31880) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் [illegible] த்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org